2005 மார்ச் 22]

திரு. லா. சந்தானம்: நன்றி. இதுபோன்று நல்ல பல காரியங்களைச் செய்துகொண்டிருக்கின்ற இந்த அரசு மேலும் பல நல்ல காரியங்களை மக்களுக்குப் பயன்படுகின்ற அளவிலே செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனக்கு வாய்ப்பளித்த தங்களுக்கு என்னுடைய நன்றியினைக் கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

7. அரசினர் தீர்மானம்

விதி 32-ஐத் தளர்த்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நாளை (23-3-2005) வினாக்கள்–விடைகள் நேரம் ஒத்திவைப்பு குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்-விடைகள் என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ, 23-3-2005 (புதன்கிழமை) அன்று தளர்த்தி, அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

நாளை வினாக்கள்-விடைகள் நேரம் இல்லை.

இதுவரை நடைபெற்ற விவாதத்திற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தமது பதிலை இன்று மாலை அளிப்பார்கள். பேரவையின் காலை நிகழ்ச்சிகள் இத்துடன் நிறைவுற்றன. பேரவை மீண்டும் மாலை 4-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

பின்னர், பேரவை பிற்பகல் 1–30 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

பிற்பகல் 4–30 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

5. மானியக் கோரிக்கைகள், 2005-2006, விவாதமும் வாக்கெடுப்பும் — தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 20 - நெடுஞ்சாலைகள் துறை—தொடர்ச்சி

(ஆ) கோரிக்கை எண் 23 - உள்துறை - சிறைச்சாலைகள் -தொடர்ச்சி

(இ) கோரிக்கை எண் 38 – பொதுப் பணித் துறை—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுடைய பதிலுரை.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் தென்கோடியில் சாதாரணத் தொண்டனாய் இருந்த என்னை, பெரியகுளம் நகர கழகச் செயலாளராகவும், பெரியகுளம் நகரமன்றத் தலைவராகவும், மாவட்ட எம்.ஜி.ஆர். இளைஞரணி செயலாளராகவும், மாவட்டக் கழகச் செயலாளராகவும், சட்டமன்ற உறுப்பினராகவும், அமைச்சராகவும் ஆக்கிய எங்கள் இதய தெய்வம் தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் தொட்டு எனது நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா என்றால் அன்பு, அம்மா–உங்களை நான் வணங்குகிறேன்.

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள், தான் வகுக்கின்ற ஒவ்வொரு திட்டத்தையும், மக்கள் மீதிருக்கும் அன்பால், அவர்கள் நலனைக் கருத்திற்கொண்டு, வகுக்கிறார்கள். அதனைச் செயல்படுத்த, எத்தகைய எதிர்ப்புகள் வந்தாலும், எப்படிப்பட்ட இடையூறுகள் வந்தாலும், அஞ்சாமையுடன் அதனை எதிர்த்து நின்று, வெற்றிபெற்று, சாதனை படைக்கிறார்கள். மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள், தான் ஆட்சிப் பொறுப்பேற்ற நாள் முதலாக, ஏழையெளிய மக்களின் எண்ணம் அறிந்து, அவர்தம் இதயம் உணர்ந்து,